

# என்
# இதயம் இயேசுவின் இல்லம்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# என்

# இதயம் இயேசுவின் இல்லம்

CHRISTIAN RESOURCE CENTRE
40, Langerkana Street,
Palayamkottai - 627002
✆ 0462-2576340

# முன்னுரை

என் இதயம் இயேசுவின் இல்லம் என்னும் இந்த நூல், ஒரு இளைஞனின் அனுபவத் தொகுப்பாகும். இதயத்தின் ஒவ்வொரு அறைக்குள் நுழையும்போதும், தங்களது இதயத்தின் அந்த அறை எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்துக்கொண்டே வாசித்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

M. இஸ்ரவேல் சீனிவாசகம்

# 1 நான் யார்?

சில்லென்று தென்றல் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால் எனக்கு வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக் கிறது! நேற்றுவரை நண்பர்கள் கூட்டத்துடன் ஆடிப்பாடித் திரிந்துகொண்டிருந்தேன். கிரிக்கெட் மட்டையும் கையுமாக அலைந்துகொண்டிருந்தேன். இரவு வேளைகளில் நீண்ட நேரம் அரட்டைக் கச்சேரி நடத்திக்கொண்டிருந்தேன். செல்போன் எஸ்.எம்.எஸ் கலாச்சாரத்தில் மூழ்கியிருந்தேன். இன்டர்நெட் சாட்டிங்கில் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தேன். வீட்டில் சாப்பிடும் நேரத்திலும் தூங்கும் நேரத்திலும் மட்டுமேகாணப்பட்டேன். கல்லூரியில் பாதி நேரம் இருப்பதில்லை. உலகத்திலேயே சந்தோஷமான மனிதனாக என்னையே நான் நினைத்துக்கொண்டிருந் தேன். சினிமா நடிகர்களில் ஒருவனாக என்னையே நான் கற்பனைசெய்துகொண்டு துள்ளித் திரிந்தேன். என் மனம் கவர்ந்தவர்களைக் காணச் செல்லும்போது டென்ஷனைக் குறைக்க சிகரெட் பிடித்துக் கொள்வேன். நண்பர்கள் யார் வீட்டிலாவது

பெரியவர்கள் இல்லை என்று தெரிந்தால் அங்கே மது பார்ட்டிகளையும் ஏற்பாடு செய்துகொள்வேன். வேறு ஏதும் விடுபட்டதா என்று தெரியவில்லை. இதுவரை நான் சொன்னதை வைத்து நீங்களே என்னை யூகித்துக்கொள்ளுங்கள்.

+ 2 தேர்வில் 80 சதவிகித மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சிபெற்ற நான் கல்லூரி முதலாண்டின் இரண்டு செமஸ்டர்களிலும் ஒரு பாடம்கூடத் தேர்ச்சி பெறாமல் போனதைக் கல்லூரி நோட்டீஸ் போர்டில் ஒட்டப்பட்டிருந்த வெள்ளைத் தாளில் பார்த்துவிட்டு வந்து, கல்லூரி மைதானத்தில் உட்கார்ந்திருக்கிறேன். என்னோடு சுற்றிய நண்பர்கள் அனைவரும் நன்கு தேர்ச்சி பெற்றுவிட்டனர். தனித்து விடப்பட்ட சூழ்நிலையில் மைதானத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். எதிர்காலத்தைப் பற்றிய பயம் என்னைப் பற்றிக்கொண்டது. என் பெற்றோர் என்மேல் வைத்துள்ள நம்பிக்கையின்படி, எதிர்காலத்தில் நான் உயர்ந்த பதவி வகிப்பவனாகவோ அல்லது மிகப்பெரிய வியாபார பிரமுகராகவோ ஆக

முடியாமல் போய், மிகச் சாதாரண வேலையில் சேர்ந்து, கஷ்டப்பட வேண்டியதிருக்குமோ என்ற பயம் எனக்குள் வந்தது. என் மனம் என் கட்டுப்பாட்டிலேயே இல்லை! எல்லாவற்றையும் சரிசெய்ய நினைக்கிறேன். ஆனால் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. என்னை நானே நொந்து கொண்டிருக்கிறேன். என்னையும் அறியாமல் என் கண்களில் கண்ணீர் வழிகிறது. யாரும் அருகில் இல்லையென்பதால் கண்ணீரைத் துடைக்கக்கூட மனமில்லாமல் அமர்ந்திருக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் இருந்தவர்களுக்குத் தான் தெரியும், இந்த வேதனை எப்படிப்பட்டதென்று! நேரம் கடக்கிறது; வானம் கருக்கிறது; மைதானம் காலியாகிறது; அமைதி நிலவுகிறது; கல்லூரி சிற்றாலயத்தின் கடிகாரம் ஆறு முறை அடித்து ஓய்ந்துவிட்டு, ஒரு வசனத்தைச் சொல்ல ஆரம்பித்தது: ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம்பண்ணுவோம்" – யோவான் 14:23

இந்த வசனத்தைக் கேட்டவுடன் என் மனதில் ஒரு சிறு நம்பிக்கை பிறந்தது. நீண்ட நாள் கழித்து இப்போது தான் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஞாபகம் எனக்கு வருகிறது. என் சிந்தனை கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தது. இயேசு கிறிஸ்துவால் என்னைக் காப்பாற்றமுடியும் என்று எனக்குத் தெரியும், ஆனால் அவரைத் தேடுவதும், அவரோடு வாழ்வதும் கஷ்டமான வேலை என்றும் அவரோடு வாழ்ந்தால் என் மனம்போல் சந்தோஷமாக வாழமுடியாது என்றும் எண்ணம் கொண்டிருந்தேன். இப்போது ஒரு முடிவிற்கு வந்து விட்டேன். என் பெற்றோர் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கை வீண்போகக் கூடாது, நான் இனி வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்று தீர்மானித்து, 'இயேசு கிறிஸ்துவே, என்னை மன்னித்து, என்னோடு வாசம்செய்யும் என்று வாய்விட்டுக் கதறினேன்; மனப்பூர்வமாக அழைத்தேன். அன்றிலிருந்து என்னுடைய சிந்தனைகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவை மையப்படுத்தியே அமைந்தன. கிறிஸ்துவின் பிரசன்னத்தைப் பற்றிய விழிப்புணர்வும்,

கிறிஸ்துவுக்குப் பிரியமான காரியங்களை மட்டுமே செய்யவேண்டுமென்ற எண்ணமும் உண்டானது. ஒரு பக்கம் சில போராட்டங்கள் எனக்கு இருந்தாலும் என்னுடைய புத்தக அறையின் முழுக் கட்டுப்பாட்டையும் இயேசு பொறுப்பெடுத்துக் கொண்டார்.

உங்களுக்கும் இதுபோன்ற பிரச்சனை உள்ளதா? கவலையை விடுங்கள்; உங்கள் புத்தக அறையின் கட்டுப்பாட்டை இயேசுவிடம் கொடுங்கள்! அப்புறம் பாருங்கள், தேவனுடைய கிரியைகளால் அந்த அறை நிரம்பும்; அதனை நீங்கள் பார்ப்பீர்கள், படிப்பீர்கள், தியானிப்பீர்கள், அப்பொழுது இயேசுவின் பிரசன்னத்தை நீங்கள் உணர்வீர்கள்; வெற்றி பெறுவீர்கள்!

## 2. என் உள்ளம் இயேசுவின் இல்லம்

அந்த மாலைப்பொழுதை என் வாழ்வில் மறக்க முடியாது. ஆம், வார்த்தைகளால் விவரிக்கவே முடியாத மாலைப்பொழுது அது! மிக நீண்ட போராட்டத்திற்குப் பின் இயேசுவை என் இதயத்தில் வந்து வசிக்குமாறு நான் அழைத்த தருணம்தான் அது! நான் மனப்பூர்வமாக இயேசுவை என் இதயத்தில் வசிக்க அழைத்ததும், சற்றும் தாமதிக்காமல், மிகவும் சந்தோஷமாகவும் மலர்ந்த முகத்தோடும், கருணை நிறைந்த பார்வையோடும், ஒரு வித ஏக்கத்தோடும், அளவில்லாத பாசத்தோடும், இயேசு என் இதயத்தினுள் பிரவேசித்தார். அந்த விநாடி மகிழ்ச்சியால் என் உடல் லேசாக நடுங்கியது; மனம் மகிழ்ந்து; இது ஒரு உணர்ச்சிகரமான சம்பவம் மட்டுமல்ல; அந்த நாள் என் ஆவி, ஆத்துமா, சரீரம் புதுபெலன் அடைந்த ஓர் நாளாகவும் அமைந்தது! எப்போதும் ஒரு பய உணர்வோடும், குற்ற உணர்வோடும், மந்தமாகவும் இருள் நிறைந்ததாகவும் இருந்த நான் இயேசு என் இதயத்தினுள் நுழைந்த அந்த விநாடியில் என்

இதயத்தில் இருந்த இருள் நீங்கியது, பயம் அகன்றது, உற்சாகம் பிறந்தது, புதிய நம்பிக்கையின் வெளிச்சம் உதித்தது, அந்த விநாடியில் நான் பெற்ற ஒரு வித புது உணர்வை நிச்சயமாக ஒவ்வொருவரும் அனுபவித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் அந்த அனுபவத்தை வார்த்தைகளால் எவ்வளவு விவரித்தாலும் அது விவரிக்க முடியாத ஒன்று! நான் பெரிதாக எதுவும் செய்துவிடவில்லை! என் முழு மனதோடு இயேசுவை என் இதயத்தில் வசிக்க அழைத்தேன். அவ்வளவுதான்! நொந்து போயிருந்த என் உள்ளத்தில் இயேசு இன்முகத்தோடு உட்பிரவேசித்தார். வெறுமையாயிருந்த என் உள்ளத்தை அன்பின் ஐக்கியத்தால் நிரப்பினார்.

இவ்வளவு பெரிய நன்மையைப் பெற்ற நான் உறுதியாக ஒரு தீர்மானம் செய்தேன். இயேசுவுக்கு இடம்கொடுத்த என் இதயத்தில் இனி வேறு யாரும் நுழைய விடமாட்டேன் என்று தீர்மானம் செய்தேன். என்னுடைய இதயத்தை இயேசுவின் இல்லமாக்குவதற்கு நான் செய்த முதல் காரியம்

இதுதான்! நான் உணர்ந்ததுபோல நீங்களும் தேவனுடைய மகத்துவத்தையும் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையையும் உணர வேண்டுமானால், உங்கள் இதயத்தின் வாசலை விரிவாகத் திறந்து, முழு மனதோடு இயேசு கிறிஸ்துவை உள்ளே வருமாறு அழைக்கவேண்டும். அப்போது அவர் நமக்குள் வாசம்செய்ய ஆவலாய் உட்பிரவேசிப்பார்.

“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்” (வெளி. 3:20).

கிறிஸ்து என் இதயத்தினுள் நுழைந்து, புதிய உறவை ஏற்படுத்திக்கொண்டபின், நான் மிகவும் ஆனந்தமாய் அவரிடம் சொன்னேன், ‘கிறிஸ்துவே நீர் என் அழைப்பை ஏற்று என் இதயத்திற்குள் வந்து, இங்கேயே வசிக்கப்போவதற்காக நன்றி. இந்த இதய இல்லத்தை உங்களுக்கே சொந்தமாக

வைத்துக்கொள்ளுங்கள். இந்த என்னுடைய இதய வீட்டின் ஒவ்வொரு அறைக்கும் உங்களைக் கூட்டிச் சென்று காண்பிக்கிறேன். என் இதய வீட்டின் ஒவ்வொரு அறையையும் பார்த்து, தெரிந்துகொண்டால், அதை உங்கள் இல்லமாக்கிக் கொள்ள உதவியாக இருக்கும். இரண்டு பேரும் மகிழ்ந்திருக்கலாம்' என்றேன். கிறிஸ்துவும் என் அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, சாதாரண, மிகச் சிறியதான என் இதயத்தை முழுவதுமாகக் காண ஆவல்கொண்டார். முதலாவதாக, நான் கல்வி பயிலும் அறைக்கு (Study Room) அழைத்துச்செல்ல தீர்மானித்தேன்.



# 3 புத்தக அறை

என் இதயத்தின் புத்தக அறைக்கு இயேசு கிறிஸ்துவை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அழைத்துச் சென்றேன். ஏனென்றால் அந்த அறையில் நான் நிறைய அறிவுசார்ந்த புத்தகங்களையும், ஆங்கில இதழ்களையும் குவித்துவைத்திருந்தேன். என் திறமைகளைக் கிறிஸ்துவுக்குக் காண்பிக்க விரும்பினேன். இருவரும் புத்தக அறைக்குள் நுழைந்தோம். இயேசு புத்தக அறைக்குள் நுழைந்தவுடன் சிறிதுநேரம் அமைதியாக அங்கு சிதறிக்கிடந்த புத்தகங்களையும் மேஜையின் மேல் கிடந்த ஆங்கில இதழ்களையும் அலமாரியில்

அடுக்கிவைத்திருந்த புத்தகங்களையும் நன்கு கவனித்துப் பார்த்தார். சுவரில் நான் மாட்டிவைத்திருந்த படங்களையும் ஆங்கில தத்துவங்கள் அடங்கிய போர்டுகளையும் கவனித்தார். நான் இயேசுவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரது முகம் கொஞ்சம் கொஞ்சமாக கவலை அடைவதை கவனித்தேன்.

இயேசு எல்லாவற்றையும் பார்த்து முடித்துவிட்டு என் பக்கமாகத் திரும்பினார். என் முகம் கூச்சத்தால் சுருங்கியது! அவரது பார்வையை நேருக்குநேர் சந்திக்கமுடியாமல் தலைகுனிந்து நின்றேன். இயேசு இந்த அறைக்கு வருவதற்கு முன்பு இந்த அறையைப் பற்றி நான் கவலைப்பட்டதே இல்லை! நான் எல்லாவற்றையும் சரியாக வைத்திருப்பதாகவே நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இயேசு என் இதயத்தின் புத்தக அறைக்குள் நுழைந்த பின்பு நான் சரியென்று நினைத்திருந்த விஷயங்கள் இப்போது எனக்கே வேதனையைத் தந்தது. அதிலும் குறிப்பிட்ட சில அசுத்தமான புத்தகங்களை இயேசு உற்று நோக்கியபோது எனக்கு அவமானமாக இருந்தது. மேஜையின் மேல் கிடந்த சில இதழ்கள் ஒரு

கிறிஸ்தவன் வாசிக்கவே கூடாததாக இருந்தது. சுவரில் நான் மாட்டியிருந்த படங்களும், தத்துவங்களும் இப்போது எனக்கு வெட்கத்தை உண்டுபண்ணின. கவலையினால் என் முகம் சிவந்துவிட்டது. இயேசு அமைதியாக என்னைப் பார்த்தார். நான் என்ன முடிவு எடுக்கப்போகிறேன் என்பதை அறிய விரும்புவதுபோல் அவரது முகம் காணப்பட்டது. கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இயேசுவிடம் பேசினேன்: 'ஐயா, இந்த அறை சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். எனக்கு உதவி செய்வீர்களா?' என்றேன். கிறிஸ்து உடனே பேசினார்: ''மகனே, இந்த அறை சுத்தம் செய்யப்படவேண்டுமென்று நீ உணர்ந்தபோதே, நீ உன் தவறை உணர்ந்துவிட்டாய். மேலும் உன் இதயத்தின் இந்த அறையைச் சுத்தம் செய்ய என் உதவி தேவை என்பதையும் உணர்ந்து, அதை என்னிடம் கேட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நிச்சயம் நான் உனக்கு உதவிசெய்கிறேன். கவலைப்படாதே" என்றார். இயேசுவின் ஆறுதலான வார்த்தைகளால் உடனடியாக உற்சாகமானேன். முதலில் புத்தகங்கள், படங்கள்எல்லாவற்றையும்

ஒரே இடத்தில் சேர்க்கச் சொன்னார். உடனே செய்தேன். இவற்றில் உண்மையில்லாதவை, கெட்டவை, சுத்தமில்லாதவை மற்றும் எதற்கும் உதவாதவை போன்றவற்றைத் தூக்கி வெளியே எறிந்துவிடு என்றார். நன்கு யோசித்து யோசித்து ஒவ்வொன்றாய் அப்புறப்படுத்தினேன். மிக வேகமாக வேலையை முடித்துவிட்டேன். இறுதியில் உண்மைகள் நிறைந்த, நன்மைதரக்கூடிய புத்தகங்கள் எவை என்று பார்த்தேன். வேத புத்தகம், சில வேத விளக்கப் புத்தகங்கள் மற்றும் சில தியான புத்தகங்கள் மட்டுமேமிஞ்சி இருந்தன. அவற்றை அலமாரியில் அடுக்கிவைத்தேன். சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களையும் தத்துவ அட்டைகளையும் தூக்கி வெளியே எறிந்துவிட்டு, அறையில் மூலையில் நான் ஏற்கனவே கழற்றிவைத்திருந்த வாக்குத்தத்த அட்டையை சுத்தம்செய்து மாட்டினேன். அந்த அட்டையில் இருந்த, "நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்" – ஏசாயா 41:10 என்ற வசனம் அந்த நேரத்தில் எனக்குப் புது உற்சாகம் தந்தது.



## 4. உணவு அறை

அடுத்ததாக இயேசு கிறிஸ்துவை என் உணவு அறைக்குள் அழைத்துச் சென்றேன். எனது உணவு அறை எப்போதும் சத்து மிகுந்த, சுவையான உணவு வகைகள் நிறைந்து காணப்படும். நான் எப்போதுமேஉணவு அறையில் நீண்ட நேரம் செலவிட்டு, மிகவும் ருசித்துச் சாப்பிடும் பழக்கமுடையவன். இயேசு கிறிஸ்துவிடம் நான் சொன்னேன்: 'இந்த அறை எனக்கு மிகவும் பிடிக்கும், இப்போது நீங்கள் உட்காருங்கள், நான் உங்களுக்கு

மிகச் சிறந்த உணவு வகைகளை பரிமாறுகிறேன்' என்றேன். இயேசு என் இதயத்தின் உணவு அறையை ஒரு முறை நன்கு பார்த்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தார். பின் என்னிடம் கேட்டார்: "மகனே, உன் இதயத்திற்கு இன்றைக்கு என்ன உணவு வகைகளை தயார் செய்திருக்கிறாய்" என்றார். நான் மிகவும் பெருமையாக எனக்கு மிகவும் பிடித்த சில புத்தகங்கள், என் பாடப் புத்தகங்கள், இதற்கு முன் நான் பெற்ற சில நற்சான்றிதழ்கள், பள்ளிச் சான்றிதழ்கள், சிறு வயதிலிருந்து நான் சேர்த்துவைத்துள்ள பணம் மற்றும் என் அறிவை வளர்த்துக்கொள்ள தினசரி, வார, மாத இதழ்களில் நான் வெட்டி வைத்திருந்த படங்களின் தொகுப்புகள் ஆகியவற்றை என் இதயத்தின் உணவு வகைகளாக எடுத்துக்காட்டினேன்.

எனக்குப் பிடித்த இந்த உணவு வகைகள் ஏதும் மோசமானவை அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்துவின் அமைதி என்னைச் சற்று யோசிக்கவைத்தது. ஒன்றை உணர்ந்துகொண்டேன். இந்த ஆகாரங்கள் எதுவும்

ஆத்துமாவின் பசியைப் போக்கவோ, ஆவிக்குரிய தாகத்தைதணிக்கவோ உதவாது என்று உணர்ந்தேன்.

இப்போது இயேசுவிடம் மெதுவாகக் கேட்டேன்: 'உங்களுக்கு இந்த உணவு வகைகள் பிடிக்கவில்லையா, என்ன பிரச்சனை' என்றேன். இயேசு சொன்னார்: "என்னை அனுப்பிய என் பிதாவின் சித்தம் செய்வதே என்னுடைய ஆகாரம், உன் இதயத்திற்கு உண்மையிலேயே திருப்தியான உணவு வேண்டுமானால், உன் கர்த்தருடைய சித்தம் செய்து, உன்னைத் தாழ்த்தி, உன்னுடைய திறமையால் நீ தயாரித்து வைத்திருப்பதாகக் கருதும் உன் சொந்த விருப்பு, வெறுப்புகளை நிறுத்தி வைத்துவிட்டுக் கர்த்தரிடம் மன்றாடு, அப்போது அவர் கொடுக்கும் ஆகாரம், உன் ஆத்துமாவை முழுவதுமாய் திருப்தியாக்கும்" என்றார். அதோடு நிறுத்திவிடாமல் பிதாவின் சித்தத்தை உணரக் காத்திருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வது எவ்வளவு இனிமையானது என்பதையும் எடுத்துச் சொன்னார்.

நம்முடைய ஒவ்வொரு செயலிலும் பிதாவின் சித்தம் அறிய, நம்மைதாழ்த்தி, அவரிடத்தில் மன்றாடி, நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுவது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதுவே நம் ஆத்துமாவை பசியின்றி பாதுகாக்கும்.

1 யோவான் 2:16ன் படி, "மாம்சத்தின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவைகள் அல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்". இந்த வசனத்தை புரிந்துகொண்டோமானால் நாம் நிச்சயமாக பிதாவின் சித்தம்செய்து, நம் ஆத்துமாவை திருப்தியான ஆகாரத்தால் நிரப்பிக்கொள்வோம்.

# 5. பொதுவான அறை

என்னுடைய இதயத்தின் 'லிவிங் ரூம்' இது. இந்த அறை எப்பொழுதும் சுத்தமாகவும், அழகாகவும் காணப்படும். சோபா, நாற்காலி போடப்பட்டிருக்கும். இங்குப் புத்தக அலமாரியும் இருக்கும். இயேசு கிறிஸ்து இந்த அறைக்குள் நுழைந்ததுமே மிகவும் மகிழ்ச்சியடைந்தார். 'இந்த அறை மிகவும் அமைதியாகவும், சுத்தமாகவும், பிரகாசமாகவும் இருக்கிறது. ஆகவே இந்த அறை நாம் தினமும் அதிகாலையில் உரையாடுவதற்கும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளுவதற்கும் ஏற்ற அறை' என்றார். நானும் இயேசு கிறிஸ்துவோடு தனிமையில்

நெருக்கமாகத் தினமும் சில நிமிடங்கள் சந்திக்கப்போவதை எண்ணி மகிழ்ந்து சம்மதித்தேன்.

தினமும் அதிகாலையிலேயே தூங்கி எழுந்தவுடன் இந்த அறைக்கு வந்துவிடுவேன். இயேசு எனக்காக தயாராக காத்திருப்பார். நான் வந்தவுடன் பைபிளை திறந்து வாசிக்க ஆரம்பிப்பார். பின் என்னை வாசிக்கச் சொல்லுவார். நானும் வாசிப்பேன். அப்போது பரிசுத்த ஆவியானவர் என்னை உற்சாகப்படுத்துவார், பெலப்படுத்துவார். அப்போது இயேசு எனக்காகச் செய்தவற்றையும் செய்யப்போகும் நன்மைகளையும் வேதத்தின் வசனங்கள், வாக்குத்தத்தங்கள் மூலம் விவரிப்பார். ஆகவே எங்களது நட்பு மிகவும் உறுதியானதுடன், இயேசுவோடு தனிமையில் பேசி மகிழும் இனிமையான அனுபவமும் கிடைத்தது.

நாட்கள் செல்லச் செல்ல அதிகாலையில் நானும் இயேசுவோடு செலவிடும் நேரம் குறைந்துகொண்டே வந்தது. இரவில் அதிக நேரம் டி.வி. பார்ப்பதால் அதிகாலையில் எழுந்திருக்க முடியவில்லை. சில நேரங்களில் டியூஷன் செல்ல நேரமாகிவிடுவதால் அவசரமாகச் சென்றுவிடுவேன். அன்று ஒருநாள் காலையில் அப்படித்தான் கிரிக்கெட் விளையாடச்

செல்ல வேகமாக இந்த அறையைக் கடக்க முயலும்போது, இயேசு அந்த அறையில் அமர்ந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். அந்த விநாடியில் என் உள்ளம்: 'இயேசு உன் இதய வீட்டின் விருந்தினராக வரவேண்டும் என்று நீ தான் அழைத்தாய்; பின் அவரே அதன் சொந்தக்காரர் என்றாய்; பின் தினமும் அவரைச் சந்திப்பேன் என்றாய்; அவர் சொன்ன சொல் மாறவில்லை! ஆம், இயேசு உன்னைச் சந்திக்கத் தினமும் தவறாமல் காத்திருக்கிறார். ஆனால் நீ ஏமாற்றிவிட்டாய்' என்றது.

இயேசுவைப் பார்த்து சொன்னேன், 'என்னை மன்னித்து விடுங்கள்; அப்பா, தினமும் நீங்கள் இங்கே காத்திருக்கிறீர்களா?' என்றேன். இயேசு சொன்னார்: "மகனே, நான் உன்னிடம் சொன்னதுபோலவே உனக்காக தினமும் அதிகாலையில் இங்கே காத்திருக்கிறேன்' என்றார். வெட்கப்பட்டுப் போனேன். இயேசு தொடர்ந்தார், 'மகனே, அதிகாலையில் அமைதியான நேரத்தில் வேதத்தை தியானிப்பதும், கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதும் உன்னுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், உலக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மட்டுமேஎன

நீ நினைத்துக் கொண்டாய். விலை மதிப்பற்ற இரத்தத்தால் நான் உன்னை மீட்டுக்கொண்டேன். நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். ஆகவே நான் நேசிக்கும் நபரான நீ தினமும் எந்தத் தொந்தரவும் இல்லாத அமைதியான அதிகாலை வேளையிலே என்னோடு இருக்கவேண்டும். என்னோடு பேசவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதனால் இந்த நேரம் உன் நன்மைக்கான நேரம் மட்டுமல்ல; என் விருப்பத்தை நிறைவேற்றும் நேரமாகவும் உள்ளது. நான் உன்னை மிகவும் நேசிப்பதால் நான் இந்த அதிகாலையில் உன்னோடு பேச விரும்புகிறேன்' என்றார்.

இப்பொழுது ஒரு உண்மையை நன்றாகப் புரிந்துகொண்டேன். இயேசு என்னை நேசிப்பதால் என்னோடு ஐக்கியம் கொள்ள விரும்புகிறார். அதனால் எனக்காக அதிகாலையில் காத்திருக்கிறார். எனவே இனி என் இயேசுவை அந்த அமைதியான அதிகாலை வேளைகளில் இதயத்தின் இந்த அறையில் அவரைத் தனியே காத்திருக்க விடமாட்டேன் என்று தீர்மானித்துவிட்டேன்.



# 6. வேலை அறை

என்னுடைய கல்லூரி ப்ராஜெக்ட் வேலைகள் மற்றும் பொழுதுபோக்குக்காகப் படம் வரைதல், விளையாட்டுச் சாமான் செய்தல் போன்றவை இந்த அறையில்தான் நடக்கும். என் இதயத்தின் ஒரு ஓரத்தில் உள்ள இந்த அறைக்குள் இயேசு கிறிஸ்துவை அழைத்துச் சென்றேன். இந்த அறை ஒழுங்கற்றுக் காணப்படுகிறது. பாதி வரைந்த நிலையில் ஒரு படம், ஆங்காங்கே சில புத்தகங்கள் சிதறிக் கிடக்கின்றன. சில பொம்மைகளும் கீழே கிடந்தன. நான் பெருமையோடு

இயேசுவிடம் சொன்னேன், 'இந்த அறையில் நிறைய பொருட்களை, படங்களை நான் உருவாக்கியிருக்கிறேன்' என்றேன். இயேசு மெதுவாக என்னிடம் கேட்டார், 'மகனே, தேவனுடைய ராஜ்யத்திற்கென்று உன் வாழ்க்கையில் நீ ஏதேனும் செய்திருக்கிறாயா' என்றார். 'இல்லை' என்றேன். நான் என் கல்லூரி ப்ராஜெக்ட்காக நான் செய்ய முயற்சிசெய்த ஒரு கருவி, என்னால் செய்யமுடியாமல் பாதியிலேயே கீழே தூக்கி எறியப்பட்டிருந்தது. இயேசு குனிந்து அதைக் கையில் எடுத்துப் பார்த்தார். நான் இயேசுவிடம் சொன்னேன், 'அப்பா, நான் இந்தக் கருவியை மிகவும் விரும்பி செய்ய ஆரம்பித்தேன். ஆனால் என்னுடைய கவனக்குறைவு மற்றும் திறமையின்மையால் இதை முழுமையாக செய்து முடிக்க முடியவில்லை' என்றேன். இயேசு, 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' (யோ. 15:5) என்ற வசனத்தை நினைவுபடுத்தினார்.

'மகனே, உன் முழு கவனத்தையும் நீ இதில் செலுத்தமுடியவில்லை என்பதையும், திறமையில் உள்ள குறைபாட்டையும் நான் அறிவேன்.

கவலைப்படாதே, பரிசுத்த ஆவியானவரின் துணையோடு நீ இந்தக் கருவியைச் செய்ய ஆரம்பிக்கலாம்'. மேலும் நான் உன் இதயத்தையும், கைகளையும் கட்டுப்படுத்த நீ உடன்பட்டால், நான் உன் மூலம் இந்தக் கருவியைச் சிறப்பாகச் செய்து முடிக்கமுடியும் என்றார். நான் மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன். இயேசுவை நம்பி, அவரையே சார்ந்திருந்தால் மட்டுமேஅவரது அற்புத கரங்கள் நமக்கு உதவிசெய்யும் என்று புரிந்துகொண்டேன்.

நான் நிறைய கற்றுக்கொள்ள விரும்பினேன். என்னுடைய இதயம் மற்றும் கைகளின் கட்டுப்பாட்டை முழுமையாக நான் இயேசுவிடம் கொடுத்துவிட்டதால், அவர் என் மூலம் தேவனுடைய ராஜ்யத்தின் சில பணிகளைப் பரிசுத்த ஆவியானவராலே செய்தார். எனவே தேவனுடைய ராஜ்யத்திற்கென்று ஏதும் செய்யவில்லையே என்ற கவலை நீங்கியது. இயேசு சொன்னார்: "மகனே, உன்னுடைய திறமைஎனக்கு வேண்டியதில்லை; நீ என்னோடு நேரம் செலவு செய்வது மட்டுமேமிக மிக முக்கியம்" என்றார். அதன் பிறகு என் மூலம் இயேசு செய்த காரியங்கள் மிகவும் அற்புதமானவை.

# 7. பொழுதுபோக்கு அறை

ஒரு நாள் காலை என் நண்பர்களிடமிருந்து போன் வந்தது. அன்று மாலை எங்கள் நண்பன் ஒருவன் விருந்து ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதில் எங்களுடைய ஆண், பெண் எல்லா நண்பர்களும் கலந்துகொள்ளப்போவதாகவும் தெரிவித்தனர். என்னுடைய இதயத்தின் பொழுதுபோக்கு அறை இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்தது. அன்று மாலை வரை அதற்கு ஆயத்தமானேன். நல்ல ஆடைகளை தெரிந்தெடுத்து இஸ்திரி செய்தேன். ஷுவை சுத்தம்செய்து பளபளவென்று பாலிஷ் அடித்தேன்.

அடிக்கடி கண்ணாடி பார்த்துக்கொண்டேன். பல வகை கிரீம்களை பூசிக்கொண்டேன். என் தலை முடியைச் சரிசெய்ய மட்டுமேஅரை மணி நேரம் பிடித்தது. இறுதியில் ஒரு வழியாகப் புறப்பட்டுவிட்டேன். வீட்டின் வாசலுக்கு வந்தேன். இயேசு அங்கேயும் காத்திருந்தார். எனக்குச் சற்று தர்மசங்கடமாகிவிட்டது. இயேசு என்னிடம், "மகனே, நீ இப்போது அழகாய் இருக்கிறாய், எங்கே போகிறாய்" என்றார். நான் நண்பர்களுடன் விருந்துக்குப் போவதைத் தெரிவித்தேன். இயேசு சொன்னார்: "நல்லது மகனே, நானும் உன்னோடு வருகிறேன்" என்றார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது! நான் இயேசுவிடம் சொன்னேன், 'அப்பா இன்றைக்கு ஒரு நாள் நான் என் நண்பர்களுடன் செல்கிறேன். ஏனென்றால் நான் போகும் இடம் உங்களுக்கு அவ்வளவு விருப்பமான இடமாக இருக்காது. அதனால் நாளை நாம் இருவரும் வெளியே செல்லுவோம். சர்ச்சுக்கோ அல்லது வேதபாடம் தியானிக்கவோ அல்லது ஏதாவது கன்வென்ஷன் கூட்டத்திற்கோ செல்லுவோம் என்று சொல்லிவிட்டு இயேசுவின் பதிலுக்குக் கூட காத்திராமல் விறு விறு என்று கடந்து சென்றுவிட்டேன்.

நண்பர்களோடு விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது, என் இதயத்தின் பொழுதுபோக்கு அறையில் இனம்புரியாத ஒரு கவலை குடிகொண்டது! என் சிந்தை இயேசுவை நோக்கித் திரும்பியது. இயேசுவை என் நண்பனாக நான் ஏற்றுக்கொண்ட போது அவரிடம் கொடுத்த வாக்குறுதிகள் என் கண்முன் தோன்றின! எங்குச் சென்றாலும் இயேசுவை என்னோடு அழைத்துச் செல்வேன், அவருக்குப் பிரியமானதை மட்டுமே செய்வேன் என்று வாக்களித்துவிட்டு இப்போது கேளிக்கையிலும் விருந்திலும் என் மனம்போல் ஈடுபட்டதை எண்ணி வருந்தினேன். நானாக வருந்தினேன் என்று சொல்வதைவிட எனக்குள் அப்படி ஒரு பாரம் உண்டாக்கப்பட்டதை உணர்ந்தேன். இரவு வீடு திரும்பினேன். இயேசு எனக்காகக் காத்திருந்தார். இரவு மிகவும் தாமதமாகிவிட்டது! ஆனால் இயேசு தூங்கவில்லை; நான் கேட்டேன்: 'அப்பா தூங்கவில்லையா'? இயேசு, 'மகனே, இவ்வளவு நேரமும் உனக்காகக் காத்திருக்கிறேன்' என்றார். மிகவும் மனம் வருந்தியவனாக அவரது காலடியில் விழுந்தேன். அப்பா, என்னை மன்னித்துவிடுங்கள்,

நீங்கள் இல்லாமல் இனி என்னால் எங்கும் சந்தோஷமாக இருக்கமுடியாது என்றேன். இயேசு என்னை அணைத்துக்கொண்டு சொன்னார்: மகனே, ஒருவன் என்னை ஏற்றுக்கொண்டு நானும் அவனை ஏற்றுக்கொண்டு எப்போது ஐக்கியம் ஆகிறோமோ, அதன் பின் அவன் தவறிப்போவது மிகவும் கடினம். அப்படியே அவன் விலகிச் சென்றாலும் அவனது இதயம் குற்ற உணர்ச்சியால் நிரம்பி நிம்மதி இழந்துபோவான், மீண்டும் அவன் என்னிடம் வந்தால் மட்டுமேஅவன் தெளிவடைவான், இழந்த சந்தோஷத்தைத் திரும்பப் பெறுவான் என்றார். அதோடு மட்டுமல்லாமல், யோவான் 15:10,11ம் வசனங்களைக் காண்பித்தார். "நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந் தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்... உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்".

அதன் பின் என் இதயத்தின் பொழுதுபோக்கு அறை இயேசு அப்பா தந்த இனிய இசை, நல்ல பாட்டு மற்றும் வார்த்தைகளால் விவரிக்க இயலாத சந்தோஷத்தினால் நிரம்பியது. இயேசு தந்த அந்த மகிழ்ச்சிக்கு நிகரானது எதுவும் இல்லை!



# 8. படுக்கை அறை

ஒருநாள் இயேசு அப்பாவை என் இதயத்தின் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றேன். அங்கே என் படுக்கையின் அருகில் நான் வைத்திருந்த என் பெண் தோழியின் படத்தைப் பார்த்தார். இது யார் என்று கேட்டார். அவள் என் பெண் தோழி என்றும் இருவரும் மிகவும் நல்ல நண்பர்களாகப் பழகுவதாகவும் சொன்னேன். இயேசு சொன்னார், 'மகனே, உனக்கு எத்தனையோ ஆண் நண்பர்கள் உள்ளனர்; ஆனால் அவர்கள் படம் எதுவும் இங்கு இல்லையே, அப்படியென்றால் இந்த ஒரு பெண் தோழிக்கு மட்டும் என்ன சிறப்பு என்றார். என்னால் இதற்கு பதில் எதுவும்

சொல்லமுடியவில்லை. என்றாலும் சற்று நிதானித்து சொன்னேன், 'அப்பா, நாங்கள் இருவரும் நாகரீகமாகத் தான் பழகுகிறோம், எங்களுக்குள் எந்தத் தவறும் இல்லை' என்று சொல்லிவிட்டுப் பேச்சை மாற்ற முயன்றேன். ஆனால் அது இயேசுவிடம் நடக்கவில்லை! இயேசு தொடர்ந்து பேசினார்: 'மகனே, ஆண், பெண் நண்பர்களாக பழகுவது ஒன்றும் தவறு இல்லை. ஆனால் அது ஒரு எல்லைக்குள் இருக்கவேண்டும். ஒரு அளவுக்குமேல் நீ அவளோடு நேரம் செலவிட ஆரம்பிக்கும்போது உன் சிந்தனை மாற ஆரம்பிக்கும்; இது இருபாலருக்கும் பொருந்தும்! இதோ பார், நீ உன் பெண் தோழியின் படத்தை உன் படுக்கை அறைவரை கொண்டு வந்துவிட்டாய். நீ அவளோடு அதிக நேரம் செலவிட்டிருக்கிறாய், தேவையில்லாமல் அதிக விவாதம்செய்திருக்கிறாய், அதனால் உனக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் உன்னுடைய சராசரி வாழ்க்கை எவ்வளவு பாதிக்கப்படுகிறது என்பதைச் சற்று யோசித்துப்பார்' என்றார். நான் கொஞ்சம் அமைதியாக யோசித்துப் பார்த்தேன். ஆம் உண்மைதான்! என்னுடைய தேர்வு

அல்லது ப்ராஜெக்ட் வேலை போன்றவற்றிற்குச் செல்லும்போது என் பெண் தோழி செல்போனில் அழைத்துப் பேசிவிட்டால் அவ்வளவு தான்! என் முழு சிந்தனையும் அவள் மீதே இருக்கும்; சீக்கிரத்தில் தேர்வை முடித்துவிட்டு, வெளியே வந்து அவளிடம் பேசவேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகிவிடும்! இதனால் பலமுறை தேர்ச்சிபெறத் தவறியுள்ளேன்; மேலும் நான் வகுப்பறையில் இருக்கும்போது எஸ்.எம்.எஸ் அனுப்புவாள். அப்புறம் என் கண்கள் மட்டும் ஆசிரியரைப் பார்த்துக் கொண்டிருக்கும். என் சிந்தனைகள் என் பெண் தோழியுடன் சென்றுவிடும்! அவளைப் பார்க்கச் செல்லும் டென்ஷனில் சில நேரம் நண்பர்களுடனும் பலமுறை பெற்றோருடனும் சண்டை போட்டிருக்கிறேன். ஒரு திரையில் காட்சிகள் ஓடியதுபோல என் மனத்திரையில் நிறைய காட்சிகள் ஓடின!

இயேசு தொடர்ந்தார்: "மகனே, இந்த வயதில் உன் சிருஷ்டிகரை மட்டுமே நினை; அதனால் நீ பாதுகாக்கப்படுவாய், உன் எதிர்காலம் சிறப்பாக

அமையும், அதன் பின் பெற்றோரின் அனுமதியுடன் நீ திருமணம்செய்து, அதன்பின் நீ முழுவதும் அவள்மீது அன்புகூரத் துவங்கினால் உன் வாழ்க்கை சிறப்பாக அமையும்! கல்வி கற்கும் காலத்தில் இப்படிப்பட்ட தேவையில்லா நட்பு உன் முழு கவனத்தையும் சிதைத்து, உன் திறமைகளைப் பாழாக்கிவிடும்! மகனே, இது உனக்கு மட்டுமல்ல, அந்தப் பெண்ணிற்கும் பொருந்தும்! உன் நினைவாக இருந்து அவளும் அவளது கல்வி மற்றும் திறமைகளை வெளிப்படுத்தமுடியாமல் பின்தங்கிவிடுவாள். எவ்வளவு திறமை, ஆற்றல் உடையவர்களாக இருந்தாலும் இப்படிப்பட்ட சிந்தனை உங்கள் முகங்களில் களை இழக்கச்செய்துவிடும்" என்றார். இயேசு சொல்வது நூற்றுக்கு நூறு சரிதான் என்பதைப் புரிந்துகொண்டேன். அப்படியே ஏற்றுக்கொண்டேன். இனி என் எதிர்காலம் மட்டுமேஎன் குறிக்கோள்!



# 9. அடைபட்டுக் கிடந்த அறை

என்னுடைய இதயத்தின் எல்லாஅறைகளின் ஆளுகையையும் இயேசு அப்பாவிடம் கொடுத்துவிட்ட மகிழ்ச்சியில் இருந்த எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது! ஆம், ஒருநாள் நான் வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது இயேசு சொன்னார்: "மகனே, ஏதோஒரு துர்நாற்றம் வீசுகிறது, கவனித்தாயா" என்றார். சற்று கவனித்தேன். ஆம் நாற்றமடிக்கிறது என்றேன். ஏதோ செத்த நாற்றம்போல் இருக்கிறது என்றார் இயேசு. நாற்றம் வந்த திசையில் சென்றோம். என் இதயத்தின் ஒரு ஓரத்தில் உள்ள, நான்

பூட்டிவைத்திருந்த அந்த சிறிய அறையிலிருந்துதான் அந்த நாற்றம் வந்தது என்பதை அறிந்துகொண்டோம். இயேசு அந்த அறையின் சாவியைக் கேட்டார். எனக்கு மனதுக்குள் சற்று கோபம் வந்தது! என் இதயத்தின் இத்தனை அறைகளை கொடுத்துவிட்டேன். இது ஒரு சிறிய அறை, நான் சொல்லமுடியாத என் பழைய காரியங்கள் சிலவற்றை அங்கு வைத்துள்ளேன். எப்போதாவது சில நேரம் அந்த அறைக்குச் சென்றுவருவேன். இந்த சுதந்திரம்கூட எனக்கு இல்லையா என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு, 'இயேசு அப்பா, இந்த ஒரு அறையின் சாவிமட்டும் கேட்காதீர்கள்' என்றேன். இயேசு சொன்னார்: "மகனே, நீ எத்தனை அறைகளை எனக்குக் கொடுத்திருந்தாலும், இந்த அறையிலிருந்து வரும் துர்நாற்றம் என்னை இங்கு வசிக்கமுடியாமல் செய்துவிடும். அதனால் இந்த அறையின் சாவியை என்னிடத்தில் கொடு, நான் அதைச் சுத்தம்செய்கிறேன் அல்லது நான் வெளியேறி விடுகிறேன்; துர்நாற்றத்தில் என்னால் வசிக்கமுடியாது" என்றார். இயேசு அப்பாவின் உறுதியான வார்த்தைகள் என்னை அதிரச்செய்தது! உடனே நான் சொன்னேன்,

'அப்பா, இதோ பிடியுங்கள் சாவியை! தயவுசெய்து எனக்கு இந்த அறையைச் சுத்தம்செய்து தாருங்கள், ஏனெனில் என்னால் அதை சுத்தம் செய்யஇயலாது'! இயேசு: "மகனே, எனக்குத் தெரியும் இதை உன்னால் சுத்தம்செய்ய முடியாதென்று! என்னை அந்த அறைக்குள் ஏற்றுக்கொண்டு, அந்த அறையை நீ என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டபடியால், இனி நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார். அவ்வளவுதான்! சற்றுநேரத்தில் அந்த அறையில் நாற்றம் வீசிக் கொண்டிருந்த பொருட்கள் தூக்கியெறியப்பட்டன. அந்த அறை முழுவதும் நல்ல வாசனை உண்டானது! அந்த அறையில் காணப்பட்ட இருள் அகன்றது!

எவ்வளவுதான் இதயத்தை திறந்துகொடுத்தாலும், ஒரு மூலையில் காணப்படும் சில இரகசிய பாவங்கள், இயேசு அப்பாவோடு நமக்கு உள்ள நல்ல உறவை, ஐக்கியத்தைக் குலைத்துவிடும் என்பதை உணர்ந்து கொண்டேன். இயேசுவை நாம் முழு மனதோடு நம் இதய வீட்டிற்குள் ஏற்றுக்கொண்ட பின்பு, நம் இதயத்தின் ஏதேனும் ஒரு சிறு பாவக்கறை

காணப்பட்டாலும் நிச்சயமாக அந்தச் சிறு பாவம் கூட நமக்கும் இயேசு அப்பாவுக்கும் இடையில் இடைவெளியை உண்டாக்கிவிடும் என்பதையும் உணர்ந்துகொண்டேன். அது மட்டுமல்ல, நாமும் நிம்மதி இழந்து, நம் முகத்தில் இருள் சூழும் நிலைக்கு ஆளாகிவிடுவோம் என்பதையும் புரிந்துகொண்டேன். ஆனால் மீண்டும் இயேசு அப்பாவிடம் சொல்லி மன்னிப்பு கேட்கும்போது அவர் உடனடியாக மன்னித்து அந்தப் பழைய பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையையும் வெற்றியையும் தருகிறார்.

# 10. என் இதய அறைகள் இயேசுவுக்கே!

நண்பர்களே, என் இதய வீட்டின் நிலையை நான் சொல்வதே எனக்கு மிகப்பெரிய விஷயமாகிவிட்டது! ஆம், ஒரு அறையைச் சுத்தம் செய்துவிட்டு, அடுத்த அறைக்குச் செல்லும்போது மீண்டும் முதல் அறை அசுத்தமாகிவிடும்! என்னுடைய சொந்த முயற்சி பலனற்றுப் போவதுடன் அடிக்கடி சோர்ந்தும் போனேன். ஆனால் இயேசு கிறிஸ்துவிடம் என் இதயத்தின் முழுப்பொறுப்பை முழு மனதுடன் கொடுத்தபோது, அவர் மகிழ்ச்சியுடன் என்னை ஏற்றுக்கொண்டதோடு என் இதயத்தின் எல்லா அறைகளையும் சுத்தம்செய்தார். இயேசு சொன்ன ஒரு விஷயம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது! “மகனே, உன் இதய வீட்டிற்கு நான் உரிமையாளர் இல்லை, விருந்தினர் மட்டுமே! எப்பொழுது நீ முழுமையாக என் பொறுப்பில் கொடுக்கிறாயோ அப்பொழுதுதான் நான் செயல்படமுடியும்” என்றார். இயேசுவின் இந்த வார்த்தைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு,

அவரது காலடியில் முழங்காற்படியிட்டு சொன்னேன், "இயேசு அப்பா, இந்த நொடியில் இருந்து நான் உங்கள் உடைமை, நீங்கள்தான் எனக்கு அதிகாரி. இந்த என் இதய வீட்டை இனி நீங்கள் தான் ஆளுகை செய்யவேண்டும்" என்று உறுதியான குரலில் சொன்னேன்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பதை என் திறமையால், சாமர்த்தியத்தால் வாழமுடியும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இயேசு கிறிஸ்துவிடம் நம் இதயத்தை முற்றிலும் அர்ப்பணித்து, அவரை ஆளுகைசெய்ய அனுமதித்தால் மட்டுமேநம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை சுத்தமாகவும், உபயோகம் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டேன். அது மட்டுமல்ல, என் இதயத்தில் மகிழ்ச்சியும், சமாதானமும் உண்டானது! என் எதிர்காலத்தைப் பற்றிய பயம் இப்போது எனக்கு இல்லை. ஏனென்றால் இப்போது அந்தப் பொறுப்பு இயேசு அப்பாவிடம் இருக்கிறது!